1973 நவம்பர் 27]

பட்டு, அவருக்கு வேண்டிய துணையாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மேலும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. பண்டை கால எழுத்துக்களை கண்டறிந்து புரிந்து கொள்வதற்கு பலருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 8 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டு பயிற்சி தருவதற்கு இந்த ஆண்டு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. எம்.ஏ. படித்தவர்கள், ஹிஸ்டரி, ஆர்கியலாஜி, பழைய வரலாறு ஆகியவை படித்தவர்களுக்கு முக்கியத்துவம் தந்து, அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஓரளவுக்கு தமிழகத்திலும் அகழ்வு ஆராய்ச்சித் துறையில் கொஞ்சம் கூடுதலாக பணத்தை ஒதுக்கி, அதற்காக தனியாக ஒரு அச்சகத்தை வைத்து, அவ்வப்பொழுது கண்டு பிடித்ததை வெளியிட்டுக்கொண்டு வருகிறார்கள்.

திரு. எஸ். வடிவேல்: தொல் பொருள் ஆராய்ச்சி ஆய்வுக்காக செலவுத் தொகையை ஏற்பது மத்திய அரசா, மாநில அரசா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாநில அரசு சார்பாக இருக்கிற தொல் பொருள் ஆராய்ச்சிக்கு மாநில அரசு தான் செலவிடுகிறது. மத்திய அரசின் சார்பாக தொல் பொருள் ஆராய்ச்சிக்கு தமிழகத்திலே சிலபல பகுதிகளிலே அகழ்வு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தப் பணியையும் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். பழம்பொருள் பாது காப்புப் பணிகள் என்ற வகையில் மத்திய அரசின் கீழும் சில பல கோவில்கள், பழைய இடங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்களில் தமிழகத்தின் சார்பாக தொல் பொருள் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

தரங்கம்பாடியிலுள்ள கோட்டை

* 394 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுகா தரங்கம்பாடி கோட்டையினை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. எஸ். வடிவேல்: தரங்கம்பாடி கோட்டை பழங்கால கோட்டை. அங்கே வெளிநாட்டவர்களும், வெளி மாநிலங்களிலிருந்து வருகிறவர்களும் தங்குவதற்கு வசதியாக அதை அரசு சீரமைப்பதற்கு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கோட்டையினை விரிவு படுத்திடும் செயற்குறிப்பு உள்ளதா என்பதுதான் கேள்வி, அதுதான் இல்லை என்று குறிப்பிட்டேன். தரங்கம்பாடி கோட்டை இதுவரையிலும் மத்திய அரசின் பாதுகாப்பில் இருந்து வந்தது. இப்பொழுது அதைத் தமிழக தொல் பொருள் ஆராய்ச்சி துறையின்கீழ் வைப்பதற்கு அனுமதி கிடைத்திருக்கிறது. அதை மேற்கொண்டிருக்கிறோம். பழைய காலத்துப் பொருள்களை பாதுகாப்பதற்கு தமிழக தொல் பொருள் ஆராய்ச்சித் துறை மேற்கொண்டிருக்கிறது. விரிவுபடுத்துவதற்கான திட்டம் அல்ல. பாதுகாத்து, பழங்கால சின்னங்களை பாதுகாக்கின்ற முறையில் அதைப் பாதுகாப்பதற்கும், அதனைப் பழுது பார்ப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தரங்கம்பாடி என்ற பெயருக்குப் பொருள் அலைகள் பாடுகின்ற ஊர் என்பது. அதை டிராங்குபார் என்று ஆங்கிலத்தில் கூறுகிறார்கள். டிரிப்ளிகேன் என்பதை தமிழில் திருவல்லிக்கேணி என்று கூறுவது போல், ஆங்கிலத்தில் எழுதும்பொழுது கூட டிராங்குபார் என்று எழுதாமல், ஆங்கிலத்தில் எழுதும்பொழுதும் தமிழில் எழுதுவதுபோல் திருவல்லிக்கேணி என்று கூறும் வகையில், அம்மாதிரி பெயர்களை தமிழிலே எழுதுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தரங்கம்பாடி என்று நான் எழுதி வருகிறேன். சிலபல இடங்களில், இப்படிக் கொஞ்சநேன். டிராங்குபார் என்று எழுதுவதை மெல்ல மெல்ல மாற்றிக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. காலப் போக்கில் இதையும் மாற்றிக்கொள்ளலாம்.

Mortuary van in General Hospital, Madras

* 419 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether Mortuary vans are available in the Madras General Hospital; and

(*b*) if not, the action taken thereon?